DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.174/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சேவியர் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) (P.w.5) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of May 2026

<u>(2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 4 எதிரிகள் ஆஜர். 1, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) )</u>

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது முக்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.அசோக்குமார் ஆகியோரின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் கடந்த 18.06.2023ம் தேதியன்று நிலையபொறுப்பில் இருந்தபோது, திருச்சுழி அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜெயராஜ் என்பவரை விசாரித்து புகார்மனு பெற்று, 16.00மணிக்கு நிலையம் வந்து

புகார்மனுவின் தன்மைகேற்ப மேற்படி நிலைய குற்ற எண்.94/2023 இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார்மனு ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களை கனம் நீதித்துறை நடுவருக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்கள் வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் திரு.அசோக்குமார் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

2. சார்பு ஆய்வாளர் திரு.அசோக்குமார் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு நாகராஜ், சூர்யா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். (**அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரிவரைபடம் அசாஆ.4 ஆக குறியிடு செய்யப்படுகிறது**). பின்னர் வாதி ஜெயராஜ், சம்பவ சாட்சிகள் வினோத்குமார், ராஜசேகரன், தவமுத்து ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்னர் 02.07.2023ம் தேதியன்று காயம்பட்ட ஜெயராஜிற்கு சிகிச்சை அளித்த திருச்சுழி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திருமதி.கவிசெல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஜெயராஜிற்கு சாதாரணக் காயம் என்றும் காயச்சான்று பெற்றுள்ளார். ( **திருச்சுழி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் 02.07.2023ம் தேதியன்று காயம்பட்ட ஜெயராஜிற்கு சிகிச்சை அளித்த அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் பூபதிபார்த்திபன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஜெயராஜிற்கு சாதாரணக் காயம் என்றும் காயச்சான்று பெற்றுள்ளார்.

( **அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்றுகள் அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. எதிரிகளை தேடிவந்த நிலையில் மாண்புமிகு ஸ்ரீவில்லிபுத்தூர் சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவு Crl.M.P.No. 3175/2023, நாள்23.06.2023–ன்படி முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து 02.07.2023ம் தேதியன்று எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(1)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எ.த.கு.வி**

நான் சொன்ன நாள், நேரத்தில் சார்பு ஆய்வாளர் அவர்கள் புகார்மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் அவர்கள் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சரியான புலன் விசாரணை மேற்கொள்ளாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் புகார்தாரர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.